**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.33/2026**

**Alangayam Police Station**

**Cr.No.189/2023, U/Sec.379,511 IPC**

| | | | |
|---|---|---|---|
| 1 | Deposition of Witness for | : | PW8 |
| 2 | Name | : | திரு.ஜெயசங்கர் |
| 3 | Father’s Name/Husband Name | : | பெரியண்ணன் |
| 4 | Village | : | திருப்பத்தூர் |
| 5 | Taluk | : | திருப்பத்தூர் |
| 6 | Calling | : | உதவி காவல் ஆய்வாளர் |
| 7 | List witness | : | Lw8 |
| 8 | Age | : | 59 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.03.2026.

As per Sec 530 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 recording of evidence ordered to be held through VC Mode. **சாட்சி VC மூலமாக சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**எதிரிகள் 1,2,4 ஆஜர்.எதிரி 3 ஆஜர் இல்லை மனுவின் பேரில் விலக்கு அளிக்கப்பட்டது.**

விசாரணை தொடங்கப்பட்ட நேரம்– 11.50 AM

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்– 12.33 PM

<u>முதல் விசாரணை</u>:–

நான் தற்போது விழுப்புரம் மாவட்டம், வளவனூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். கடந்த 22.08.2023–ம் தேதி காலை 06.00 மணிக்கு ஆலங்காயம் காவல் நிலையத்தில் நான் பொறுப்பு அலுவலில் இருந்த பொழுது மேல்நாச்சிப்பட்டு கிராமத்தை சேர்ந்த ஏழுமலை மகன் சின்னத்தம்பி என்பவர் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி கையும் களவுமாக பிடிபட்ட எதிரிகள் நால்வருடன் சம்பவத்திற்கு பயன்படுத்ததப்பட்ட TN 25 AZ 3899 என்ற பதிவுஎண் கொண்ட கார் மற்றும் திருட முயற்சித்த விநாயகர் சிலை ஆகியவற்றை ஒப்படைத்து அவருடன் சிலரும் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவின் பேரில் ஆலங்காயம் காவல் நிலைய குற்ற எண்.189/2023 இதச பிரிவுகள் 379,511 IPC படிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு ஏற்கனவே அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **<u>அ.த.சா.ஆ.6.</u>** திருட முயற்சித்த விநாயகர் சிலையை புகார்தாரரான பூசாரியும், ஊர் பொதுமக்களின் வேண்டுகோளின் அடிப்படையில் கோயிலில் மீண்டும் வழிபட கோயில் பூசாரிடமே ஒப்படைத்தேன். இச்சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட நான்கு சக்கர வாகனமான காரை படிவம் 91 ல் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றிக்கொண்டேன். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.7.** மேற்படி

ஆவணத்தை தற்பொழுது பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலும். இன்று என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள வாகனம்தான் அது. புகைபடங்கள்(ஏழு வரிசை) கொண்ட **அ.சா.பொ.1** அதன் குறுந்தகடு **அ.சா.பொ.2.** படிவம் 91, புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையோடு இணைத்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். வழக்கு சொத்தான TN 25 AZ 3899 என்ற பதிவுஎண் கொண்ட கார் இடைக்கால பொறுப்பில் அதன் உரிமையாளர் திரு.கோபி த.பெ. ராதாகிருஷ்ணன் CMP எண் 11402/2023, 20.09.2023 அன்று நீதித்துறை நடுவர் எண் 3 திருப்பத்தூர் அவர்களின் உத்தரவு படி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி வாகனத்தை உரிமையாளர் பெற்றுச்சென்றுள்ளார். வழக்குப் பதிவு செய்த அன்றைய தினமே காலை 07.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் காமராஜ், சீனிவாசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டும், சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் **அ.த.சா.ஆ.8.** மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.9.** பட்டியல் சாட்சிகள் சின்னத்தம்பி, சந்தோஷ், ராமு, காமராஜ், சீனிவாசன் ஆகிய சாட்சிகளைத் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகள் A1.ஏழுமலை, A2.பிரகாசம், A3.செல்வம், A4.சுரேஷ் ஆகியோர்களை 22.08.2023 காலை 09.05 மணியளவில் ஆலங்காயம் காவல் நிலையத்தில் காரணம் கூறி எதிரிகளைக் கைது செய்தேன், 1ம் எதிரியான ஏழுமலை என்பவர் எவ்வித அச்சுறுத்தலும் செய்யாமலும், ஆசை வார்த்தை கூறாமலும் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள்

நவீன்குமார், அருள் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த எதிரி ஏழுமலையின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.10.** பின்னர் எதிரிகளை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் நால்வர் மீது 379, 511 IPC படிக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் உள்ளதைப்போல்தான் சொன்னார்கள். நான் விசாரித்த பொழுது சாட்சி நவீன்குமார், அருள் ஆகியோர் 1ம் எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தபொழுது சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்ததாக கூறினார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

சின்னதம்பி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் வழக்கு பதிவு செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவமானது எந்த தேதியில் மற்றும் நேரத்தில் நடந்தது என்றால் 22.08.2023 அன்று அதிகாலை 4 மணிக்கு நடந்தது. நீங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரம் என்னவென்றால் 22.08.2023 அன்று காலை 6 மணிக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையில் 9ம் வரிசையில் களவாட பட்ட பொருள் குறித்து நீங்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். 10ம் வரிசையில் சிலையின் மதிப்பு குறித்து நிபுணர்களிடம் அனுப்பிவைத்து அறிக்கை எதுவும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். படிவம் 91 ல் வழக்கு சொத்தை 13.09.2023 அன்றுதான்

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தீர்கள் என்று சொன்னால் 22.08.2023 அன்றே நீதிமன்றத்திற்கு முதன்முறை அனுப்பிவைத்தேன். 22.08.2023 அன்று நீதிமன்றத்தில் திருப்பப்பட்ட படிவம் 91ல் வழக்கு சொத்தை ஆஜர் படுத்தாத காரணத்தினால் திருப்பப்பட்டதாக சான்றொப்பம் உள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தான விநாயகர் சிலையை பூசாரியிடம் சாட்சிகள் முன்னிலையில் ஒப்படைத்தாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளது குறித்து ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். களவு செய்யப்பட்ட பொருள்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து உரிமையாளர் நீதிமன்றத்தை அணுகி அந்த வழக்கு சொத்தை பெறவேண்டுமே தவிர நீங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்காமல் நேரடியாக வழக்கு சொத்தினை அதன் உரிமையாளர் வசம் ஒப்படைப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் எதிரிகளின் மீது சரிவர விசாரணை செய்யாமல் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.